# பாஸ்கா திருவிழாவிற்கு பின் வரும் மூன்றாம் ஞாயிறு

## திருப்பலி முன்னுரை

திருப்பலிக்கான வாசகங்கள்:

அப்போஸ்தலர் பணிகள் 2:14, 22–33

1 பேதுரு 1:17–21

லூக்கா 24:13–35

தலைப்பு:

"துயரத்திலிருந்து நிறைவான ஆசீர்வாதம் வரை – உயிர்த்தெழுந்த ஆண்டவரை சந்திக்கும் அனுபவம்"

ஒரு சில நாட்களுக்கு முன்பு, ஒரு சிறிய கிராமத்தில் வாழ்ந்த ஒருவர் பற்றி நாம் சிந்திப்போம்.

அவர் வளர்த்த தோட்டம் மிகவும் அழகாக இருந்தது. ஒவ்வொரு வசந்த காலத்திலும், வெறும் மண்ணில் சிறிய விதைகளை விதைத்து, அவற்றை அன்புடன் பராமரித்து, தண்ணீர் ஊற்றி, இயற்கை சீற்றங்களிலிருந்து காத்து வளர்த்தார்.

அதை பார்த்த அக்கம் பக்கத்தினர் அவரிடம்,

"இந்த விதைகள் நிச்சயமாக பலன் தருமா இல்லையா என்று தெரியாத நிலையில், இவ்வளவு உழைப்பு ஏன்?" என்று கேட்டார்கள்.

அவர் சிரித்தபடி கூறினார்:

"நான் நம்புகிறேன்…

நாம் அன்புடன் பராமரித்து, பொறுமையுடன் காத்திருந்தால்,

இந்த விதைகள் கண்டிப்பாக செழித்து வளர்ந்து பலன் தரும்."

அன்பான சகோதரர் சகோதரிகளே,

இன்றைய தினம் நாம் அனைவரும் ஒன்றுபட்டு, பாஸ்கா திருவிழாவிற்கு பின் வரும் மூன்றாம் ஞாயிறை கொண்டாடுகிறோம்.

சில நேரங்களில், அந்த அக்கம் பக்கத்தினர் போலவே,

நாமும் நமது இதயங்களை வெறுமையுடனும்,

துயரம், சந்தேகம், பயம் ஆகியவற்றோடும் ஆண்டவரின் முன் கொண்டு வருகிறோம்.

ஆனால், அந்த தோட்டக்காரன் விதைத்த விதைகள் போல,

கடவுளின் கிருபை நமக்குள் வேரூன்றி,

நமது துயரத்தை மகிழ்ச்சியாக மாற்றி,

எதிர்பாராத தருணங்களில் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார்.

எம்மாவுஸ் வழியில் நடந்த சீடர்கள் போல,

நாமும் சில சமயம் ஆண்டவரை அறியாமல் பயணிக்கிறோம்;

ஆனால், அப்பத்தைப் பங்கிடும் தருணத்தில் அவரை உணர்ந்தது போல,

நமது வாழ்க்கையின் சாதாரண தருணங்களிலும்

உயிர்த்தெழுந்த ஆண்டவர் நம்மை சந்திக்கிறார்.

ஆகையால்,

இந்த திருப்பலியில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு,

நமது இதயங்களை திறந்து,

நமது தினசரி வாழ்க்கை தருணங்களிலும்,

பங்குத்தள ஜெபங்களிலும்,

திருப்பலியில் அப்பம் பிட்கும் அந்த புனிதமான நேரத்திலும்,

உயிர்த்தெழுந்த ஆண்டவரை அறிந்துகொள்ளத் தயாராகி,

இந்த புனிதப் பயணத்தை தொடங்குவோம்.

## திருப்பலிக்கான மறையுறை

"துயரத்திலிருந்து நிறைவான ஆசீர்வாதம் வரை

உயிர்த்தெழுந்த ஆண்டவரைச் சந்திக்கும் அனுபவம்"

பல ஆண்டுகளுக்கு முன்பு, சில யாத்திரிகர்கள் புனித நகரமான எருசலேமுக்குப் பயணம் மேற்கொண்டார்கள். அந்தக் குழுவில் ஒரு முதிய பெண்மணியும் இருந்தார். அவர் ஏற்கனவே ஆயிரக்கணக்கான மைல்கள் நடந்து, பிரான்ஸ்

நாட்டிலுள்ள லூர்து அன்னை திருத்தலம், போர்ச்சுகலில் உள்ள பாத்திமா அன்னை திருத்தலம், ஸ்பெயினில் உள்ள சாந்தியாகோ டி கம்போஸ்தேலா போன்ற புனித தலங்களைத் தரிசித்தவர்.

ஆனால், அவர் கூறியதாவது

"இந்தப் பயணங்களில் முக்கியமானது தூரமோ, பார்த்த நினைவுச் சின்னங்களோ அல்ல; வழியிலே கேட்ட கதைகள்தான் மெல்லிய இசையாக சொல்லப்பட்ட ஜெபங்கள், பகிரப்பட்ட துயரங்கள், உறவுகளில் வெளிப்பட்ட மகிழ்ச்சிகள்."

அவர் மேலும் சொன்னார்

"நாம் ஒன்றாகப் பயணிக்கும்போது, ஒருவரை ஒருவர் நலம் விசாரித்து அறிந்துகொள்ளும் அந்த தருணங்களில் கடவுள் தம்மை வெளிப்படுத்துகிறார்."

ஒருமுறை, ஒரு பெரியவர் , தன் குழந்தையை இழந்த ஒரு இளம் தாயுடன் நீண்ட நேரம் பேசியதில் அவர் அமைதியாக நடந்த அனுபவத்தை பகிர்ந்தார். பல மணி நேர உரையாடலுக்கு பிறகே அந்தத் தாய் பேசத் தொடங்கினாள். அவள் பேசத் தொடங்கியதைப் பற்றி அந்த முதியவர் கூறினார்:

"அவளுக்கு அறிவுரைகள் தேவையில்லை; அவளுக்கு ஒருவரின் தோழமை மட்டுமே தேவைப்பட்டது."

அவளுடைய கண்ணீரும் அமைதியும் கலந்து கிடந்த தருணங்களில், நம்பிக்கை மீண்டும் உயிர்த்தெழுந்தது.

ஆம், சில நேரங்களில் கடவுள் வானத்திலிருந்து குரல் கொடுக்கவில்லை; நாம் ஒன்றாக நடக்கும் அடிகளின் ஒலியிலேயே அவர் பேசுகிறார்.

அன்பானவர்களே,

இன்றைய நற்செய்தி நம்மை இதே போன்று ஒரு பயணத்துக்கு அழைக்கிறது புவியியல் பாதையில் அல்ல, நம் இதயங்களின் பாதையில்.

எம்மாவூஸ் வழியில் சென்ற இரு சீடர்கள், மனமுடைந்தவர்களாய் எருசலேமிலிருந்து வெளியேறுகிறார்கள். அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை நொறுங்கிப் போயிற்று. மெசியா வந்து இஸ்ரவேலை மீட்பார் என்ற எதிர்பார்ப்பு, சிலுவை மரணத்தால் சிதறிப் போயிற்று. வாக்குறுதிகளால் நிரம்பியிருந்த எருசலேம், இப்போது வெறுமையாகத் தோன்றுகிறது.

இது நம்முடைய வாழ்க்கையிலும் நடக்கிறதே!

ஒரு கனவு கலைந்து போகிறது…

ஒரு நோய் அறிக்கை நம்மை அதிர்ச்சியடையச் செய்கிறது…

ஒரு உறவு முறிந்து விடுகிறது…

ஒரு ஜெபம் பதிலளிக்கப்படாதது போல் தோன்றுகிறது…

அப்போது நாம் துக்கம், ஏமாற்றம், பயம், சந்தேகம் ஆகியவற்றை சுமந்து கொண்டு, அந்த வலியிலிருந்து விலகிப் போக முயல்கிறோம்.

ஆனால், நாம் விலகும் அந்த இடங்களிலேயே குணமடையும் கிருபை காத்திருக்கிறது.

இயேசுவின் சீடர்கள் தங்களுடைய அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்கள்– இயேசுவின் வாழ்க்கை, மரணம், வெறுமையாக இருந்த கல்லறை.

போன்றவற்றிலிருந்து நமக்கு ஒரு ஆழமான பாடம் கிடைக்கின்றது

பகிரப்பட்ட துயரம் இலகுவாகிறது; பேசப்படாத துயரம் பெரிதாகிறது.

நாம் நம்முடைய அனுபவங்களை பகிரும்போது–

இழப்புகள், உடல்நலக் கஷ்டங்கள், முறிந்த உறவுகள், தளர்ந்த நம்பிக்கை– போன்றவற்றால்

அந்த உரையாடல்களில் கடவுள் நுழைகிறார்.

ஒரு நபர் திடீரென தனது வேலையை இழந்தார். வெட்கத்தால் தனிமையில் இருந்தார்.

ஆனால் ஒருநாள், ஆலயக் கூட்டத்தில் தனது துயரத்தைப் பகிர்ந்தார்.

அந்த இரவு அவரது பிரச்சினை தீரவில்லை;

ஆனால் அவரது உள்ளம் மாறியது–

தனிமை ஒற்றுமையாக மாறியது,

அவமானம் மரியாதையாக மாறியது.

கடவுள் அந்த உரையாடலிலேயே செயல்பட்டார்.

நற்செய்தியில் உள்ளது போல , ஒரு “அந்நியர்” அவர்களுடன் சேர்கிறார்.

அவர் தீர்ப்பிடாமல் கேட்கிறார்; பின்னர் விவிலியத்தின் வெளிச்சத்தில் அவர்களுடைய அனுபவத்தை விளக்குகிறார்.

அப்போது அவர்களுடைய இதயம் எரிகிறது.

அன்பானவர்களே,

உயிர்த்தெழுந்த ஆண்டவரைச் சந்திப்பது பெரும்பாலும் அசாதாரண தருணங்களில் அல்ல;

சாதாரண தருணங்களில்தான்—

ஒரு உரையாடல்,

ஒரு காது கொடுத்து கேட்கும் மனம்,

ஒரு அக்கறை நிறைந்த பார்வை.

இப்போது கலிலேயா கடற்கரைக்கு வருவோம்.

சீடர்கள் மீண்டும் தங்கள் பழைய தொழிலான மீன்பிடிப்புக்குத் திரும்பியுள்ளனர்.

முழு இரவும் உழைத்தும் எதுவும் கிடைக்கவில்லை.

அப்போது கரையில் நின்ற ஒருவர் கேட்கிறார்:

“உங்களுக்கு ஏதாவது கிடைத்ததா?”

அவர்கள் நேர்மையாகச் சொல்கிறார்கள்: “இல்லை.”

அவர் சொல்கிறார்:

“படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள்.”

அவர்கள் கீழ்ப்படிகிறார்கள்—வலை நிரம்புகிறது!

அப்போது அவர்கள் உணர்கிறார்கள்:

“இவர் இயேசு ஆண்டவர்!”

இங்கே ஒரு முக்கியமான உண்மை:

உயிர்த்தெழுதல் நம் அன்றாட வாழ்க்கையிலும் நிகழ்கிறது.

தோல்வியில்…

வெற்றிடத்தில்…

பயத்தில்…

இயேசு நம்மைச் சந்திக்கிறார்.

நம் வெறுமையை நிறைவாக்குகிறார்.

ஒரு மீனவர் சொன்னார்:

“அற்புதம் மீன்களில் இல்லை; மீண்டும் முயற்சி செய்யும் துணிவில்தான்.”

அன்பானவர்களே,

நாமும் கேள்வி கேட்கலாம்:

மீண்டும் மன்னிக்க தயாரா?

மீண்டும் நம்பிக்கையுடன் வாழ தயாரா?

மீண்டும் அன்பு செய்ய தயாரா?

பல நேரங்களில் உயிர்த்தெழுதல்,

“மற்றொரு முயற்சியில்” துவங்குகிறது.

எம்மாவூஸ் வழியில் சீடர்கள் இயேசுவை உடனே அறியவில்லை.

ஆனால் உரையாடலில், வேத வசனங்களில், அப்பத்தைப் பிளந்த தருணத்தில்—அவரை அறிந்தார்கள்.

ஆம்,

நம்பிக்கை ஒரு மின்னல் அல்ல; அது மெதுவான உதயம்.

இயேசு நம்மை முழுமையாக சந்திக்க அழைக்கிறார்.

அந்த சந்திப்பு, நம் சாதாரண வாழ்க்கையை உயிர்த்தெழுதலின் அனுபவமாக மாற்றுகிறது.

ஒரு இளம் பெண், பல ஆண்டுகளுக்குப் பிறகு தன் ஊருக்கு திரும்பினார்.

யாரும் நினைவில் வைத்திருக்க மாட்டார்கள் என்று பயந்தார்.

ஆனால் அந்த ஊர்க்காரர் ஒருவர் அவளை அழைத்து, “நீ என்னை நினைவில் வைத்திருக்கிறாயா?” என்றார்.

அந்த தருணம் அவளுக்கு உணர்த்தியது:

“நான் ஒருபோதும் தனியாக இல்லை.”

அப்படியே—

இயேசு நம்மை பெயர் சொல்லி அழைக்கிறார்.

நம்மை ஒருபோதும் மறப்பதில்லை.

வலை… அப்பம்… தீ…

இவை எல்லாம் சாதாரண விஷயங்கள்.

ஆனால் அவற்றின் வழியாகவே கடவுள் செயல் படுகிறார்.

ஒரு விதவை பெண் சொன்னார்:

"நான் எப்போதும் வலிமையாக இல்லை;

ஆனால் தினமும் ஆலயத்திற்கு வருகிறேன்."

அந்தச் சிறிய விசுவாசத்திலேயே

கடவுள் அதிசயங்களை நிகழ்த்துகிறார்.

அன்பானவர்களே,

இயேசு நம்மிடமிருந்து பெரிய செயல்களை எதிர்பார்ப்பதில்லை;

நமது உண்மை, நமது சிறிய அர்ப்பணிப்பு–பொறுமை , தியாகம் போன்றவற்றை மட்டுமே அவர் விரும்புகிறார்

உயிர்த்தெழுந்த ஆண்டவரைச் தரிசிக்கும் நாம்,

மற்றவர்களுக்கு சாட்சிகளாக, அன்பின் கருவிகளாக, ஆதரவாக வாழ அழைக்கப்படுகிறோம்.

"வலப்பக்கத்தில் வலையை வீசுங்கள்" என்ற அவரது அழைப்பை ஏற்று,

பயத்தைத் தாண்டி,

மீண்டும் முயற்சி செய்து,

நம்பிக்கையுடன் வாழ்வோம்.

இறுதியாக–

ஒரு இளைஞன் தன் தந்தையின் மரணத்திற்குப் பிறகு புனிதப் பயணம் சென்றான்.

துக்கத்தில் மூழ்கியிருந்தான்.

ஆனால் அந்தப் பயணத்தில் அன்பையும், உதவியையும், நம்பிக்கையையும் கண்டான்.

ஒருநாள் அவன் எழுதினான்:

"நான் தனியாக நடக்கிறேன் என்று நினைத்தேன்;

ஆனால் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் கடவுள் என்னுடன் இருந்தார்."

அன்பானவர்களே,

நம்முடைய துயரத்தை ஆனந்தமாகவும்,

வெறுமையை நிறைவாகவும்,

நம் பயணத்தை உயிர்த்தெழுதலாகவும் மாற்றுகிறவர்

உயிர்த்தெழுந்த ஆண்டவரே!

ஆமென் 🙏🏻

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai